**மே – 18**

# தேசியச் செய்திகள்

## 2018 –டைம்ஸ் உயர்கல்வி வளரும் பொருளாதார நாடுகளின் பல்கலைக்கழகங்கள் தரவரிசை

- அண்மையில் வெளியிடப்பட்டுள்ள 2018-ஆம் ஆண்டிற்கான டைம்ஸ் உயர்கல்வி வளரும் பொருளாதார நாடுகளினுடைய பல்கலைக்கழகங்களின் தரவரிசைப் பட்டியலில் (Times Higher Education Emerging Economies University Rankings 2018) இந்தியப் பல்கலைக்கழகங்கள் தங்களினுடைய தரவரிசைகளில் முன்னேற்றத்தைக் கண்டுள்ளன.

| Emerging Economies University Ranking 2018 | Emerging Economies University Ranking 2017 | Position in World University Rankings 2018 | Institution | Country/region |
|---|---|---|---|---|
| 1 | 1 | =27 | Peking University | China |
| 2 | 2 | 30 | Tsinghua University | China |
| 3 | 3 | 194 | Lomonosov Moscow State University | Russian Federation |
| 4 | 6 | 116 | Fudan University | China |
| 5 | 5 | 132 | University of Science and Technology of China | China |
| 6 | 9 | =177 | Zhejiang University | China |
| 7 | 7 | =188 | Shanghai Jiao Tong University | China |
| 8 | 11 | =169 | Nanjing University | China |
| 9 | 4 | 171 | University of Cape Town | South Africa |
| 10 | 10 | =198 | National Taiwan University | Taiwan |

- இந்த தரவரிசைப் பட்டியலில் முதல் 50 தரவரிசையுள் 4 இந்தியக் கல்வி நிறுவனங்கள் தரவரிசையினைப் பெற்றுள்ளன. முதல் 100 தரவரிசையுள் 8 இந்தியப் பல்கலைக்கழகங்கள் தரவரிசையினைப் பெற்றுள்ளன.
- இந்த தரவரிசைப் பட்டியலில் பெங்களூருவில் அமைந்துள்ள இந்திய அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம் (Indian Institute of Science-IISC) 13-வது இடத்திலும், மும்பையின் இந்திய தொழில்நுட்பக் கழகம் (Indian Institute of Technology -IIT) 26வது இடத்திலும், கரக்பூரில் அமைந்துள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம் (Indian Institute of Technology- IIT) 45 இடத்திலும் உள்ளது.

- தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக நடப்பாண்டின் டைம்ஸ் உயர்கல்வி வளரும் நாடுகளின் பல்கலைக்கழகங்கள் தரவரிசைப் பட்டியலில், சீனாவின் பெகிங் பல்கலைக்கழகமும் (Peking University ) டிசிங்குவா பல்கலைக்கழகமும் (Tsinghua University ) முதல் இரு இடங்களில் உள்ளன. மேலும் முதல் 10 இடங்களில் கூடுதலாக 5 சீனப் பல்கலைக்கழகங்கள் இடம் பெற்றுள்ளன.

## இராமாயண சுற்றுலாப் பாதை

- இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் நேபாளப் பிரதமர் K.P.ஷர்மா ஒளி ஆகியோர் ஒன்றாக இணைந்து இந்தியாவின் அயோத்தி நகருக்கும் நேபாளத்தின் ஜனாக்பூர் நகருக்கும் இடையே நேரடிப் பேருந்துச் சேவையைத் தொடங்கி வைத்துள்ளனர்.
- இந்த இரு இடங்களும் இந்து மக்களுக்கு புனித இடங்களாகும். இந்தியா மற்றும் நேபாளத்தில் ஆன்மீக மதச் சுற்றுலாவினை மேம்படுத்துவதற்கான சுவதேஷ் தர்ஷன் திட்டத்தின் (Swadesh Darshan Scheme) கீழ் இந்தியாவினுடைய இராமாயணம் ஆன்மீகச் சுற்றுலாச் சுற்றின் (Ramayan spiritual tourist Circuit) ஒரு பகுதியாக இந்த நேரடிப் பேருந்துச் சேவை துவங்கப்பட்டுள்ளது.
- நேபாளத்தில் உள்ள ஜனாக்பூர் நகரமானது இராமரின் மனைவியான சீதையின் பிறப்பிடமாகும். சீதையினுடைய நினைவாக ஜனாக்பூரில் 1910 ஆம் ஆண்டில் ஜானகி கோயில் (Janaki temple) கட்டப்பட்டுள்ளது.
- சுவதேஷ் தர்ஷன் திட்டத்தின் கீழ் இராமாயணம் ஆன்மீகச் சுற்றுலாச் சுற்றினை மேம்படுத்துவதற்காக மத்திய அரசானது 15 புனிதத் தலங்களினை அடையாளம் கண்டுள்ளது.
- அவையாவன.
    - அயோத்தியா, நந்திகிராமம், ஸ்ரீரிங்வெர்பூர் (Shringverpur) – உத்திரப் பிரதேசம்
    - சீதாமர்ஹி (Sitamarhi), பக்சார், தர்பாங்கா (Darbhanga) – பீஹார்
    - சித்திரகூட் (Chitrakoot) – மத்தியப் பிரதேசம்
    - ஜக்தல்பூர் –சத்திஸ்கர்
    - மகேந்திரகிரி-ஒடிஸா
    - நாசிக் மற்றும் நாக்பூர் -மகாராஷ்டிரா
    - பத்ராச்சலம் –தெலுங்கானா
    - ஹம்பி –கர்நாடகா
    - இராமேஸ்வரம் –தமிழ்நாடு

## நெருக்கடி மேலாண்மைக்கான ஒருங்கிணைந்த மையம்

- நெருக்கடி மேலாண்மைக்கான ஒருங்கிணைந்த மையத்தினை (Integrated Centre for Crisis Management -ICCM) மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் உள்ள பாபா அணு ஆராய்ச்சி மையத்தில் (Bhabha Atomic Research Centre -BARC) குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தொடங்கி வைத்துள்ளார்.
- இரசாயன வேதியியல், உயிரியல், கதிரியக்க மற்றும் அணு சக்தி பொருட்களினால் உண்டாகும் (chemical, biological, radiological and nuclear-CBRN) அவசர நிலைகளுக்கு மிகவும் திறம்பட்ட முறையில் பதிலெதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ள இம்மையம் இந்தியாவிற்கு உதவும்.
- நாடு முழுவதும் உள்ள 504 கதிரியக்க உணர்விகளின் பிணையத்திலிருந்து (radiation sensors) பெறப்படும் கதிரியக்க வெளிப்பாட்டுத் தரவுகளை இந்த நெருக்கடி மேலாண்மைக்கான ஒருங்கிணைந்த மையம் கண்காணிக்கும்.

# சர்வதேசச் செய்திகள்

## REPLACE பிரச்சாரம்

- 2023-ஆம் ஆண்டில் உலகின் உணவு விநியோகச் சங்கிலியிலிருந்து (global food supply chain) தொழிற்சாலைகளினால் உற்பத்தி செய்யப்படுகின்ற செயற்கை டிரான்ஸ் கொழுப்புகளை (industrially-produced artificial trans-fats) ஒழிப்பதற்காக REPLACE எனும் விரிவானத் திட்டத்தை உலக சுகாதார மையம் (World Health Organization -WHO) துவங்கியுள்ளது.
- மதிப்பாய்வு (Review), ஊக்குவிப்பு (Promote), சட்டமியற்றல் (Legislate) மதிப்பீடு செய்தல் (Assess), விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் (Create awareness) மற்றும் செயல்படுத்துதல் (Enforce) எனும் ஆறு செயற்உத்திகளின் (strategic actions) ஆங்கில சுருக்கமே REPLACE என்பதாகும்.
- உலக உணவு விநியோகச் சங்கிலியிலிருந்து தொழிற்சாலைகளினால் உற்பத்தி செய்யப்படும் டிரான்ஸ் கொழுப்புகளின் முழுமையான, உடனடி, மற்றும் நீடித்த நிலையிலான ஒழிப்பினை உறுதி செய்வதற்கு இந்த REPLACE பிரச்சாரமானது அதன் ஆறு உத்திகளில் படிப்படியான வழிகாட்டுதல்களை வழங்குகின்றது.
- டென்மார்க் நாடானது தொழிற்சாலைகளால் உற்பத்தி செய்யப்படும் டிரான்ஸ் - கொழுப்புகளின் மீது கட்டாய கட்டுப்பாடுகளை விதித்துள்ள உலகின் முதல் நாடாகும்.

# மாநிலச் செய்திகள்

## ரையத்து பந்து திட்டம்

- விவசாயிகளினுடைய வாழ்வாதாரத்திற்கு (livelihood of farmers) ஆதரவளிப்பதற்காக, உழவர்களின் நண்பன் (friend of farmers) எனப் பொருள்படும் ரையத்து பந்து (Rythu Bandhu) எனும் முதலீட்டு ஆதரவுத் திட்டத்தினை (Investment support scheme) தெலுங்கானா அரசு தொடங்கியுள்ளது.
- விவசாய விளைபொருட்கள் உற்பத்தியினையும் (agricultural production), உற்பத்தித் திறனையும் (productivity) அதிகரிக்க இத்திட்டத்தின் கீழ் ஓர் ஆண்டிற்கு இருமுறை விவசாயிகளுக்கு நேரடி நிதியியல் உதவி வழங்கப் பெறும்.
- இந்தியாவில் எந்த ஒரு மாநிலத்தினாலும் தொடங்கப்பட்ட விவசாயிகளுக்கு முதலீட்டு ஆதரவுகளை வழங்குகின்ற முதல் வகையானத் திட்டம் இதுவேயாகும்.
- இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் ஒரு ஏக்கருக்கு ரூ 8000 ரூபாய் அளவு விவசாயிகள் முதலீட்டு ஆதரவினை பெறுவர். பருவகால பயிருக்கென (monsoon) ரூ.4000 ரூபாயும், குளிர்காலப் பயிருக்கென (Rabi season) ரூ.4000 ரூபாயும் வழங்கப்படும்.

## மன்னிப்பு உடனான மறுவாழ்வுத் திட்டம் - கேரளா

- மாநிலத்தில் உள்ள மாவோயிஸ்டுகளின் நல்வாழ்வினிற்காக, மன்னிப்பு உடனான மறுவாழ்வுத் திட்டத்திற்கு (amnesty-cum-rehabilitation scheme) கேரள மாநில அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இடதுசாரி தீவிர சித்தாந்தத்தினால் (Left extreme ideology) வழிமாறியவர்களை மீண்டும் சமுதாயத்தின் மைய நீரோட்டத்திற்கு (mainstream of society) கொண்டு வருவதே மன்னிப்பு உடனான மறுவாழ்வுத் திட்டத்தின் நோக்கமாகும்.

## அருணாச்சலப் பிரதேசம் – மிகப்பெரிய சூரியஒளி மின் நிலையம்

- அருணாச்சலப் பிரதேச மாநில முதல்வரான பேமா காண்டு (Pema Khandu) மாநிலத் தலைநகரான இட்டா நகரில் உள்ள ஆற்றல் விழிப்புணர்வு பூங்காவில் (Energy Awareness Park) மாநிலத்தின் மிகப்பெரிய சூரியஒளி மின் நிலையத்தை (solar power plant) துவக்கி வைத்துள்ளார்.
- இந்த மின் நிலையத் திட்டமானது அருணாச்சலப் பிரதேச ஆற்றல் மேம்பாட்டு நிறுவனத்தினால் (Arunachal Pradesh Energy Development Agency-APEDA) அமல்படுத்தப்பட்டுள்ளது.
- தீன் தயாள் உபாத்யாயா கிராம் ஜோதி யோஜனா (Deen Dayal Upadhyaya Gram Jyoti Yojana-DDUGJY) திட்டத்தின் கீழ் இந்த ஆண்டிற்குள் ஊரக மின் இணைப்பிற்காக (rural electrification) மத்திய அரசினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை முழுமைப்படுத்துவதனை

நோக்கி அருணாச்சலப் பிரதேசம் செயல்பட்டு வருகின்றது.

# பிரபலமானவர்கள், நிகழ்வுகள் மற்றும் விருதுகள்

## மிரினாலினி சாராபாய்

- இந்தியாவின் புகழ்பெற்ற பாரம்பரிய நடனக் கலைஞரான (Indian classical dancer) மிரினாலினி சாராபாயின் 100-வது பிறந்த நாள் ஆண்டினை நினைவுகூரும் வகையில் கூகுள் நிறுவனமானது ஓர் சிறப்பு டூடுளை (doodle) வெளியிட்டுள்ளது.



- பரதநாட்டியம் (Bharatanatyam) மற்றும் கதக்களி (Kathakali) ஆகிய இரு தென்னிந்திய நடனங்களில் இவர் நிபுணராவார்.
- செயற்பாட்டு கலைக்களுக்கான தர்பானா அகாடமி (Darpana Academy of Performing Arts) என்ற அகாடமியையும் இவர் நிறுவியுள்ளார்.
- 300-க்கும் மேற்பட்ட நாடக நடனங்களுக்கு இவர் நடனங்களை (choreographed) வடிவமைத்துள்ளார்.
- குழந்தைகளுக்காக பல்வேறு நாவல்கள், கதைகள் மற்றும் கவிதைகளையும் இவர் எழுதியுள்ளார்.
- மிரினாலினி சாராபாய் பல்வேறு விருதுளைப் பெற்றுள்ளார்.
    - பத்மஶ்ரீ விருது-1965
    - பத்ம பூஷண் விருது - 1992
    - சங்கீத நாடக அகாடமி உறுப்பினர் (Sangeet Natak Akademi Fellowship) - 1994
    - கேரள மாநில அரசின் வருடாந்திர விருதான நிஷாகாந்தி புரஷ்காரம் (Nishagandhi Puraskaram) விருது-2013.

## 11வது KISS மனிதாபிமான விருதுகள் - 2018

- உலகின் குறிப்பிடத்தகு பொருளாதார அறிஞர் (Noted economist) மற்றும் பொருளாதாரத்திற்கான நோபல் பரிசினை வென்றவருமான பேராசிரியர். முஹம்மது யூனுஸ் (Prof. Muhammad Yunus) அவர்களுக்கு 2018-ஆம் ஆண்டின் 11வது KISS மனிதாபிமான விருது (11th KISS Humanitarian Award 2018) வழங்கப்பட்டுள்ளது.
- உலக வறுமையை ஒழிப்பதில் அவர் மேற்கொண்டு வரும் நிகரில்லா அர்ப்பணிப்பிற்கும், சமூகம் மற்றும் பொருளாதார மேம்பாட்டினை வளர்ப்பதற்காக அவர் ஆற்றி வரும் பங்களிப்பிற்காகவும் பேராசிரியர். முஹம்மது யூசுப்பிற்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.
- பேராசிரியர் முஹம்மது யூசுப் வங்கதேசத்தில் கிராமின் வங்கியின் (Grameen Bank) நிறுவனராவார். இவர் சிறுநிதியியலின் தந்தை (Father of Microfinance) எனவும் பரவலாக அழைக்கப்படுகின்றார்.
- சமூகப் பிரச்சனைகளோடு தொடர்புடைய பல்வேறு களங்களில், சமூகத்திற்காக குறிப்பிடத்தகு மாபெரும் அளப்பரிய பங்களிப்பினை ஆற்றுகின்ற நபர்களுக்கும், ஓர் உண்மையான மனிதாபிமானியாக (true humanitarian) தம்மை வேறுபடுத்திக் காட்டுகின்ற நபருக்கும் வழங்கப்படுகின்ற ஓர் புகழ்பெற்ற சர்வதேச விருதே KISS மனிதாபிமான விருதாகும்.
- KISS சர்வதேச மனிதாபிமான விருதானது ஒடிஸாவின் புவனேஸ்வரில் அமைந்துள்ள சமூக அறிவியலுக்கான கலிங்கா நிறுவனத்தின் (Kalinga Institute of Social Sciences -KISS) நிறுவனரான டாக்டர் அக்யூதா சமந்தாவால் (Dr.Achyuta Samanta) 2008ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

## தேசிய தொழிற்நுட்ப விருதுகள் 2018

- மத்திய அரசின் தொழிற்நுட்ப மேம்பாட்டு ஆணையமானது (Technology Development Board) முன்னணி தடுப்பூசித் தயாரிப்பு நிறுவனமான பாரத் பயோடெக் நிறுவனத்திற்கு (Bharat Biotech) அதனுடைய ரோட்டா வைரஸ் தடுப்பூசிக்காக (Rotavac vaccine) 2018-ஆம் ஆண்டிற்கான தேசிய தொழிற்நுட்ப விருதினை (National Technology Award) வழங்கியுள்ளது.
- புத்தாக்கத் தொழில்நுட்பங்கள் (innovative technologies), வெற்றிகரமாக மேம்படுத்தப்பட்டவை (successfully developed), மற்றும் இந்தியாவிலிருந்து வர்த்தகமயமாக்கப்பட்ட கண்டுபிடிப்புகள் ஆகியவற்றுக்கான மிகவும் புகழ்மிக்க இந்த உயரிய விருதானது புதுதில்லியில் உள்ள விக்யான் பவனில் நடைபெற்ற தேசிய தொழிற்நுட்ப தின கொண்டாட்டத்தின் போது குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தால் வழங்கப்பட்டது.
- 2015-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட ரோட்டா வைரஸ் தடுப்பூசியானது 2016-ஆம் ஆண்டு இந்தியாவின் உலகளாவிய நோய் தடுப்பூசித் திறனூட்டல் திட்டத்தில் (Universal Immunization Programme-UIP) அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தினுடைய தொடக்கத்தின் கீழ் இந்த ரோட்டா வைரஸ் தடுப்பூசி பயன்பாடானது 9 மாநிலங்களில்

நடைமுறைப்படுத்தப்பட்டது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச குடும்பங்கள் தினம் - மே 15

- ஆண்டுதோறும் உலகம் முழுவதும் மே 15-ஆம் தேதி அன்று சர்வதேச குடும்பங்கள் தினம் (International Day of Families) கொண்டாடப்படுகின்றது.
- சமுதாயத்தினுடைய அடிப்படை அலகான (Basic unit of society) குடும்பங்களினைப் பாதிக்கின்ற மக்கட் தொகைப் பெருக்கம் (demographic progression) சமூகம் மற்றும் பொருளாதாரம் சார்ந்த விஷயங்களைப் பற்றிய அறிவினை மக்களிடையே அதிகரிப்பதற்கும், குடும்பங்களோடு தொடர்புடைய பிரச்சனைகளைப் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கும் சர்வதேச குடும்பங்கள் தினம் கொண்டாடப்படுகின்றது.
- 2018- ஆம் ஆண்டிற்கான சர்வதேச குடும்பங்கள் தினத்தின் கருத்துரு- "குடும்பங்கள் மற்றும் உள்ளடங்கிய சமுதாயம்" (Families and inclusive societies).
- 1993-ஆம் ஆண்டு ஐ.நா.வின் பொது அவையினால் சர்வதேச குடும்பங்கள் தினம் பிரகடனம் செய்யப்பட்டது.

- - - - - - - - - - - - - - - -